## வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர்
## வாழி திருநாமம்

ஏதமில் பன்னீராயிரம் இயம்பினான் வாழியே
எழில் பெரியவாச்சான் பிள்ளை இன்னருளோன் வாழியே
ஆதுமில் நேர் ஆனி தனில் சோதி வந்தான் வாழியே
அநவரதம் அழகிய சிங்கர்க்கு ஆட்செய்வோன் வாழியே
போதமுடன் கீதை வெண்பா புகலுமவன் வாழியே
புண்ணியமாம் ப்ரும்மதேசம் தோன்றினான் வாழியே
வாது செய்து குதிருட்டிகளை வெருட்டினான் வாழியே
வாதிகேசரி சுந்தரமுனி வையகத்தில் வாழியே

---